# உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் எதற்கு?

அனைவருக்கும்

# பாதுகாப்பான

சிங்கப்பூர்

13892-Why the ISA 66-67 2/16/04, 1:02 PM

சிங்கப்பூர் வாழ்வதற்கும் வேலை செய்வதற்கும் விளையாடுவதற்கும் பாதுகாப்பான ஓர் இடம். நாம் நமது குடும்பங்களை அமைதியான முறையில் நடத்தி வரலாம். அவர்களின் பாதுகாப்பைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. நாம் அண்டை மற்றும் தொலைவில் உள்ள மற்ற நாடுகளுடன் நட்பாக இருக்கிறோம்.

நாம் கவனமாக இருந்து தீயச் செயல்கள் நிகழ்வதற்கு முன்பே அவற்றைத் தடுத்து நிறுத்த முடிவதால்தான் இதனை நாம் செய்ய முடிகிறது. தீயச் செயல்களில் ஈடுபட முயல்பவர்கள் பிடிபட்டு நம் சட்டத்திற்கிணங்க தண்டிக்கப்படுகின்றனர்.

ஆனால், இந்தப் பாதுகாப்பு எளிதாகக் கிட்டிவிடும் என்று நாம் நினைத்து விடக்கூடாது. நாம் நம் குடும்பங்களையும் இல்லங்களையும் நாட்டையும் காக்க கடுமையாக உழைக்க வேண்டியிருக்கிறது.



## இந்தப் பணியைச் செய்பவர் யார்?

அனைவரும் செய்கிறார்கள். உங்களைப் போன்றவர்கள் போதைப்பொருளுக்கு எதிரானப் போராட்டத்தில் மத்திய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவிற்கும், 10–ல் 4 குற்றவாளிகளைக் கைது செய்ய காவல்துறைக்கும், சிறைக்கைதிகளின் குடும்பங்களுக்கும் உதவுகின்றீர்கள்.

சிலருக்கு, சிங்கப்பூரைப் பாதுகாப்பாக வைத்திருப்பது முழு–நேர வேலையாக இருக்கிறது.

சிங்கப்பூர் காவல் துறை, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதோடு உயிரையும் சொத்தையும் பாதுகாத்திட பொதுமக்களுடன் அணுக்கமாகச் செயல்படுகிறது.

உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை ஒரு வேவு நிறுவனமாகும். அது சிங்கப்பூரின் உள்நாட்டு நிலைத்தன்மைக்கு ஏற்படும் பாதுகாப்பு மிரட்டல்களை முறியடிப்பதிலும் சிங்கப்பூர் இடரின்றியும் பாதுகாப்பாகவும் இருப்பதையும் உறுதிசெய்கிறது.

சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படை அசம்பாவிதங்களுக்கு எதிரான 24–மணி நேர அவசரகாலச் சேவையை வழங்கிவருவதுடன் அவசரநிலைகளையும் குடிமைப் பேரிடர்களையும் சமாளிப்பதற்குத் தேவையான அறிவையும் திறன்களையும் மக்களுக்குப் புகட்டி வருகிறது.

மத்திய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு போதைப்பொருளைத் தெருக்களிலிருந்து அகற்றிடவும் போதைப்புழங்கிகளின் உயிர்களையும்



13892-Why the ISA 68-69 2/16/04, 1:02 PM

அவர் தம் குடும்பங்களையும் காப்பாற்றிடவும் பாடுபடுகிறது.

குடிநுழைவு மற்றும் சோதனைச் சாவடிகள் வாரியம் சிங்கப்பூரில் தனிநபர்களையும் குழுக்களையும் அடையாளங் காண்பதோடு மக்கள் நாட்டிற்குள் நுழைவதை, தங்குவதை, இங்கிருந்து வெளியேறுவதை மேற்பார்வையிடுகிறது.

சிறைச்சாலைகள் துறை குற்றவாளிகள் தங்கள் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக் கொள்ள உதவுவதுடன், பொறுப்புள்ள குடிமக்களாக ஆவதற்கு உதவிட அவர்களுடைய குடும்பங்களுடன் சேர்ந்து செயல்பட்டுவருகிறது.

இந்த நிறுவனங்கள் யாவும் நமது “உள்துறைக் குழு” என்று நாம் அழைக்கும் ஒரே குழுவாக அமைகின்றன.

# சிங்கப்பூரின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு ஏற்படும் மிரட்டல்கள்

13892-Why the ISA 72-73 2/16/04, 1:02 PM

உலகின் வேறெந்த நாட்டைப் போன்றே, சிங்கப்பூரும் தனது உள்நாட்டுப் பாதுகாப்புக்கு எதிராக மிரட்டல்களை எதிர்நோக்குகிறது. நமது பாதுகாப்புக்கும் நம் நாட்டின் நிலைத்தன்மைக்கும் மிரட்டல்கள் உண்டு என்பது இதன் பொருள். இந்த மிரட்டல்கள், வெளிநாட்டு கீழறுப்பு, சதிநாசம், வேவுபார்த்தல், பயங்கரவாதம் ஆகியவற்றால் அல்லது மற்ற நாடுகளால் அரசியல் நோக்கங்களுக்காக ஏவிவிடப்பட்ட வன்செயலால் ஏற்படலாம். அல்லது நமது குடிமக்கள் ஒருவர் மற்றவரின் இனம் அல்லது சமயத்தைச் சகித்துக் கொள்ளமுடியாமல் இருக்கிறபோதும் தங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறபோதும் மிரட்டல்கள் ஏற்படலாம். அவர்களுடைய நடவடிக்கைகள் நமது நாட்டின் பல இன நல்லிணக்கத்தையும் சமூகப் பிணைப்பையும் கீழறுத்துவிடுகின்றன.



# சிங்கப்பூர் மற்ற நாடுகளால் கீழறுக்கப்பட முடியுமா?

மலாயா கம்யூனிஸ்ட் கட்சி (ம.க.க) மலாயாவையும் சிங்கப்பூரையும் 1950-களின் தொடக்கத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் கொண்டு வர முனைந்தது. அதன் சிங்கப்பூர் கிளை, தொழிலாளர்களை வேலை நிறுத்தத்திலும், வன்முறையிலும் ஈடுபடும்படி தூண்டி விட்டது. கலவரங்களை மூட்டிவிட மாணவர்களையும் பயன்படுத்தியது. ம.க.க கொலைப்படைகள், போலிஸ்காரர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் தங்களுக்கு மிரட்டலாக விளங்கியவர்கள் ஆகியோரைக் குறி வைத்தது.

1963-ல் இந்தோனீசியா மலேசியாவுடனும் சிங்கப்பூருடனும் சண்டை தொடுத்தது. தன் ‘கான்ஃப்பிராண்டாசி’ அல்லது எதிர்ப்புக் கொள்கையின் காலக்கட்டத்தில், இந்தோனீசிய சதிநாசக்காரர்கள் சிங்கப்பூரின் நிலைத்தன்மையைக் குலைக்க வெடிகுண்டுகளை நாட்டிட அனுப்பிவைக்கப்பட்டனர்.

அவர்கள் வைத்த வெடிகுண்டுகளில் ஒன்று 1965 மார்ச் 10-ல் மூன்று பேரைக் கொன்றது. தாங்கள் குறிவைத்த முக்கிய இடங்களுக்கு அருகே சதிநாசக்காரர்கள் நெருங்க முடியாமற்போனதால், அவர்கள் வெடிகுண்டுகளை பொதுவிடங்களில் நாட்டினர். அவர்களுள் இருவர் பிடிபட்டு, விசாரணைக்குப் பின்னர் தூக்கிலடப்பட்டனர்.



13892-Why the ISA 74-75 2/16/04, 1:03 PM

# இன, சமய பூசல்களுக்கு சிங்கப்பூரில் இன்னும் சாத்தியம் உண்டா?

1960–களின் தொடக்கத்தில், மலாய் தீவிரவாதக் கும்பலான 'அங்காத்தான் ரெவோலுசி டெண்டாரா இஸ்லாம் சிங்கப்பூரா' (ஆர்டிஸ்), சிங்கப்பூரை ஓர் இஸ்லாமிய நாடாக்க முற்பட்டது. இந்தக் கும்பல் இனக் கலவரங்களைப் பற்றி வதந்திகளைப் பரப்பி மக்களை சண்டையிட ஆயத்தப்படுத்தியது. 1964–லும் 1969–லும் (ஆர்டிஸ் முறியடிக்கப்பட்டு வெகுநாட்களுக்குப் பிறகு) இன அடிப்படையில் மக்கள் மீண்டும் சண்டையிட்டும் கொலைசெய்தும் வந்தனர்.

1970–களின் தொடக்கத்தில் *நன்யாங் சியாங் பாவ்* சீன பத்திரிக்கையும் அரசாங்கத்திற்கு எதிராக சீனர்களின் இன உணர்வுகளைத் தூண்டிவிட முற்பட்டது. அது, சீன மொழியும் கலாச்சாரமும் சிங்கப்பூரில் அழிந்து போகக்கூடிய அபாய நிலையில் இருப்பதாகச் செய்திகள் வெளியிட்டது.

1980–களில் சமயம் மறுபடியும் பயன் படுத்தப்பட்டது. சிங்கப்பூர் மக்கள் விடுதலை நிறுவனம், சிங்கப்பூர் துறைமுகக் கிடங்குகள், மக்கள் செயல் கட்சிக் கிளைகள், திரையரங்குகள், சமூக நிலையங்கள், கடைத்தொகுதிகள் ஆகியவற்றைத் தகர்த்திட திட்டம் தீட்டியது. அது, அரசாங்கம் முஸ்லிம்களை மோசமாக நடத்துகிறது என்ற எண்ணத்தில் அரசாங்கத்தைக் கவிழ்க்க முற்பட்டது.



# சிங்கப்பூர் எப்போதாவது பயங்கரவாதிகளுக்கு இலக்காகவோ புகலிடமாகவோ இருந்திருக்கிறதா?

பயங்கரவாத அமைப்புகளின் பால் 'நட்பற்ற'தாக இருந்த நாடுகளுக்கு சிங்கப்பூரிலிருந்து எண்ணெய் செல்லக்கூடாது என்பதற்காக 1974–ல் நான்கு பயங்கரவாதிகள் புலாவ் புக்கத்தில் உள்ள ஷெல் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் எண்ணெய்த் தாங்கிகளைக் குண்டுகள் வீசித் தகர்த்தனர். பயங்கரவாதிகளில் இருவர் ஜப்பானிய செம்படையையும் மற்ற இருவர் பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியையும் சேர்ந்தவர்கள்.

அந்த பயங்கரவாதிகள் லாஜு என்று பெயரிய படகை பிணையாட்களுடன் கடத்தினர். அவர்கள் தங்களை வேறொரு நாட்டுக்குக் கொண்டு செல்ல சிங்கப்பூர் அரசாங்கத்திடம் ஒரு விமானத்தை வழங்கும்படி கோரினர். அவர்கள் விமானத்திற்குள் நுழைந்த போது, சிங்கப்பூர் மற்றும் ஜப்பானிய அதிகாரிகள் பிணையாளிகளாக இருந்தனர். அந்த அதிகாரிகளில் ஒருவர் தற்போது குடியரசின் அதிபராக இருக்கும் திரு. எஸ். ஆர் நாதன் அவர்களாவார். பின்னர் தப்பியோடிய பயங்கரவாதிகள் பிடிபடவே இல்லை.

1991–ல் நான்கு பயங்கரவாதிகள் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானம் SQ 117 கோலாலம்பூரிலிருந்து சிங்கப்பூருக்கு வந்துகொண்டிருந்தபோது அதனைக் கடத்தினர். அவர்களுக்கு அதிர்ஷ்டம் இல்லாமல்



13892-Why the ISA 76-77 2/16/04, 1:04 PM

போய்விட்டது. இரு விமானிகளில் ஒருவரைக் கொல்ல அவர்கள் மிரட்டியபோது சிங்கப்பூர் ஆயுதப்படையின் அதிரடி வீரர்கள் திடீரென விமானத்துக்குள் புகுந்து அந்தப் பயங்கரவாதிகள் நால்வரையும் கொன்றனர்.

சில வேளைகளில் சிங்கப்பூரே இலக்காக இருப்பதில்லை. ஆனால், சிலர் பிற நாடுகளைத் தாக்குவதற்கு நமது நாட்டைத் தளமாக பயன்படுத்திக்கொள்கிறார்கள். இலக்காகும் பிற நாடுகளுள் நமது நட்பு நாடுகளும் அடங்கும்.

1980-களில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக சிங்கப்பூர் பயன்படுத்தப் பட்டது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் சிங்கப்பூர் கட்டமைப்பு ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகப் போர் தொடுக்க பணம் வசூலித்தது. இந்தக் கட்டமைப்பு தடுத்துநிறுத்தப்பட்டப் போதிலும் அதற்குப் பதிலாக 2000-ஆம் ஆண்டில் இன்னொன்று தலைதூக்கியது.

டிசம்பர் 2001-றிலும் ஆகஸ்டு 2002-டிலும் பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக மொத்தம் 36 பேர் கைதாயினர். அவர்களுள் 32 பேர் ஜமா இஸ்லாமியா (ஜஇ) என்ற இரகசியக் கும்பலின் உறுப்பினர்கள். ஒருவரைத் தவிர கைது செய்யப்பட்ட ஏனையோர் சிங்கப்பூரர்கள். செப்டம்பர் 2002 வரை, 31 பேர் தடுப்புக்காவலில் இருந்தனர். இதர ஐவர் கட்டுப்பாட்டு ஆணைகளுடன் விடுவிக்கப்பட்டனர்.

தடுப்புக்காவல் கைதிகள் பலர் ஆப்கானிஸ்தானுக்குச் சென்றுவந்துள்ளனர். அங்கு அவர்கள் அல் கயிடா பயங்கரவாத முகாம்களில்



பயிற்றுவிக்கப்பட்டனர். செப்டம்பர் 11-ல் அமெரிக்காவில் அரங்கேற்றப்பட்ட தாக்குதல்களுக்கு அல் கயிடாவே மூலகாரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஜஇ உறுப்பினர்கள் குண்டு தயாரிக்கும் வழிமுறைகள், உள்ளூர் இலக்குகளான யீசூன் பெரு விரைவு போக்குவரவு நிலையம், சாங்கி கடற்தளம் மற்றும் தண்ணீர்க்குழாய்கள் ஆகியவற்றின் நிழற்படங்களையும் ஒளிநாடாக்களையும் வைத்திருந்தனர். கைதுசெய்யப்பட்டப்போது சிலர் சிங்கப்பூரிலுள்ள தூதரகங்களை வெடிகுண்டு வைத்து தகர்க்க சதித்திட்டம் தீட்டிக் கொண்டிருந்தனர். இந்தச் சதித்திட்டம் வெளிநாட்டுப் பயங்கரவாதிகளால் தீட்டப்பட்டது. சிங்கப்பூர் அளித்த தகவலின் பேரில் வெளிநாட்டு பயங்கரவாதிகளுள் ஒருவன் மணிலாவில் கைதானான். சிங்கப்பூரில் சதிநாச வேலைக்காக ஒரு டன்னுக்கும் கூடுதலான வெடிமருந்துகளை (டிஎண்டி) அவன் பெற்றிருந்ததாகக் கண்டறியப்பட்டது.-



13892-Why the ISA 78-79 2/16/04, 1:04 PM

# சிங்கப்பூரை யாரேனும் வேவு பார்க்கிறார்களா?

1970–களின் இறுதிவாக்கில் முன்னைய சோவியத் யூனியனின் மாஸ்கோவில் சிங்கப்பூர் தூதரகத்தில் பணியாற்றிய குறியீட்டு எழுத்தர் ஒருவர் சோவியத் ஒற்றர் ஒருத்தியின் மாயவலையில் சிக்கலானார். அவர் அவளுக்கு குறியீட்டில் அடங்கிய செய்திகளைக் கொடுக்கத் தொடங்கி இறுதியில் தான் பயன்படுத்திய இரகசிய குறியீடுகளையே கொடுக்களானார். இதன் வழி, சோவியத் அதிகாரிகள் மாஸ்கோவில் உள்ள சிங்கப்பூர்த் தூதரகத்தால் அனுப்பப்பட்ட மற்றும் பெறப்பட்ட அனைத்து இரகசிய செய்திகளையும் துலக்கிட முடிந்தது.

வேவு பார்த்தல் சிங்கப்பூரிலும் இடம்பெறமுடியும். 1980–களில் சோவியத் வேவு அதிகாரி ஒருவர் கணினிப் பாகங்களை வாங்குவதற்காக கணினி விற்கும் கடை ஒன்றுக்குச் சென்றபோது சிங்கப்பூர் ஆயுதப்படை (சி.ஆ.ப) அதிகாரி ஒருவருடன் நட்புக் கொண்டார்.

சி.ஆ. படையின் இரகசியத் தகவல்களைப் பெற, அந்த சோவியத் ஒற்றன் சி.ஆ.ப அதிகாரி தன் கல்வியைத் தொடரவும் ஒரு சிறிய சுயதொழில் தொடங்கவும் லஞ்சமாக பணம் தருவதாக வாக்களித்தான்.

1997–ல் பெண் அரசாங்க ஊழியர் ஒருவர் அன்னிய வேவுச் சேவைக்காக மிகவும் இரகசியமாக பணியாற்றிவந்த ஓர் ஆடவரிடம் இரகசிய அரசாங்கத் தகவல்களைக் கொடுத்ததற்காகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.



1998–ல் நடந்த மற்றொரு சம்பவத்தில், நான்கு சிங்கப்பூர் ஆடவர்கள் அன்னிய வேவுச் சேவை ஒன்றுக்கு அரசாங்கத் தகவல்களைச் சேகரித்ததற்காகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். அந்நால்வருள் ஒருவர் புதிய ஆட்களைச் சேர்ப்பதிலும் ஈடுபட்டிருந்தார்.

அந்நிய சதிநாசம், பயங்கரவாதம், வேவு பார்த்தல் ஆகிய மூன்றும் சிங்கப்பூரின் அரசுரிமை, அமைதி, வளப்பம், இன மற்றும் சமய நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு மிரட்டலாக இருக்ககூடிய ஒரு சில மட்டுமே.



13892-Why the ISA 80-81 2/16/04, 1:04 PM

# உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம்

13892-Why the ISA 82-83 2/16/04, 1:04 PM

சிங்கப்பூரின் இடர்காப்புக்கும் பாதுகாப்புக்கும் ஏற்படும் அபாயங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அனுமதிக்கும் சட்டங்களுள் ஒன்றுதான் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம்.

# உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் அரசாங்கம் எதனைச் செய்ய அனுமதிக்கிறது?

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் (உ.பா.ச) என்பது உள்நாட்டுப் பதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய சட்டவிரோதக் கும்பல்கள் முளைத்து பல்கி பெருகுவதைத் தடுப்பதற்குரிய ஒரு சட்டமாகும். ஓர் அவசர நிலையின் போது, வட்டாரம் ஒன்று பாதுகாப்பு மிரட்டலுக்கு உள்ளாகி இருக்கிறது என்று பிரகடனப் படுத்தி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்திட அவ்வட்டாரத்தைத் தன் கட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கத்துக்கு உ.பா.ச அனுமதி தருகிறது.

அனைத்துலகப் பயங்கரவாதம், அன்னியக் கீழறுப்பு, வேவுப்பார்த்தல், வன்முறைச் செயல்கள் அல்லது இனத்தையோ சமயத்தையோ பயன்படுத்தி வெறுப்புணர்ச்சியைத் தூண்டுதல் போன்றவற்றைப் புலன் விசாரணைச் செய்ய உ.பா.ச உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையால் பயன்படுத்தப்படுகிறது.

உ.பா.ச வின் அம்சங்களுள் தடுப்புக் காவலும் அடங்கும். இதன் பொருள் என்னவெனில் உ.பா.ச சிங்கப்பூருக்கு பயங்கர மிரட்டலாக விளங்கும் ஒருவரை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லாமலேயே ஈராண்டுகள் வரை தடுப்புக் காவலில் வைக்க அரசாங்கத்தை இந்தச் சட்டம் அனுமதிக்கிறது என்பதாகும். [1]

[1] தடுப்புக்காவல் சிங்கப்பூர் அரசியலமைப்பின் கீழ் அதிபரால் நியமிக்கப்பட்ட ஓர் ஆலோசனை மன்றத்தால் மறுபரிசீலிக்கப்படுகிறது.



13892-Why the ISA 84-85 2/16/04, 1:04 PM

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் (உ.பா.ச) கீழ் வரும் ‘தடுப்புக் காவல்’ இறுதிகட்ட நடவடிக்கையாக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

எடுத்துக்காட்டுக்கு, 1996–ல் உலக வர்த்தக நிறுவனத்தின் அமைச்சர்நிலை மாநாடு சிங்கப்பூரில் தொடங்குவதற்கு முன்பு சிங்கப்பூரில் ஒளிந்திருந்த அன்னிய பயங்கரவாத சந்தேகப் பேர்வழி ஒருவன் வெளியேற்றப்பட்டான் – தடுப்புக் காவல் பயன்படுத்தப்படாமலேயே.

உ.பா.ச–வின் அதிகாரங்கள் சிங்கப்பூருக்கும் நமது மக்களுக்கும் ஏற்படக்கூடிய அபாயங்களுக்கு எதிராக தக்கத்தருணத்திலும் தீர்க்கமாகவும் செயல்பட அரசாங்கத்தை அனுமதிக்கிறது.



# உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் மூலங்கள் யாவை?

உள்நாட்டுப் பாதுகப்புச் சட்டம் 1948–ல் மலாயா மற்றும் சிங்கப்பூரில் பிரிட்டிஷாரால் அறிமுகப்படுத்திய அவசர கால விதிமுறைகளை மூலமாகக் கொண்டது. இந்த விதிமுறைகள் கம்யூனிஸ்டுகள், பயங்கரவாதிகள், சதிநாசக்காரர்கள் மற்றும் இன, சமய தீவிரவாதிகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன.

1955–ல் அவசர கால விதிமுறைகளுக்குப் பதிலாக பொது பாதுகாப்பு ஆணை மாற்றீடுசெய்யப்பட்டது. இந்த ஆணை, 1956–ல் 13 பேரை பலிவாங்கிய கலவரங்களை மூட்டியவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. இதே ஆணை 1961–ல் அரசாங்கத்தை வன்முறைமூலம் கவிழ்க்க எண்ணிய ‘அங்காத்தான் ரெவோலுசி டெண்டரா இஸ்லாம்’ என்ற கும்பலுக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டது.

1963–ல், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் பொது பாதுகாப்பு ஆணையை மாற்றீடு செய்தது.



13892-Why the ISA 86-87 2/16/04, 1:04 PM

# உள்நாட்டுப்
# பாதுகாப்புச்
# சட்டம் பற்றிய
# பொதுவான கேள்விகள்

13892-Why the ISA 88-89 2/16/04, 1:04 PM

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் இனிமேல் தேவையில்லை என்கின்றனர் சிலர். அது கம்யூனிஸத்தை எதிர்த்து சண்டையிடுவதற்கு வரையப்பட்டது. அத்தகைய கம்யூனிஸ மிரட்டல் இப்போது முடிந்துவிட்டது என்று கூறும் வாதம் சரியன்று. உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம், பொது பாதுகாப்பை நிலைநாட்டும் ஆணை மற்றும் அவசரகால விதிமுறைகள் யாவும் கம்யூனிஸக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகவும் இன, சமய தீவிரவாதிகள் போன்ற மற்றவர்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டன.

சதிநாசம் மற்றும் இன, சமய தீவிரவாதத்தை ஒடுக்க சிங்கப்பூர் சட்டம் ஏதும் பெற்றிராததால் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் இத்தகைய பிரச்னைகளைச் சமாளிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.



## உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் தடுப்புக் காவலை மட்டும்தான் குறிக்குமா?

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் (உ.பா.ச) வெறும் தடுப்புக் காவலுக்கு வகைசெய்யும் அதிகாரங்களைவிட கூடுதல் அதிகாரங்களைப் பெற்றிருக்கிறது.

எடுத்துக்காட்டுக்கு, உ.பா.ச – வின் இதர அதிகாரங்கள் பொய்த் தகவல்களைப் பரப்பி பொதுமக்களிடையே பீதியை உண்டாக்கும் நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர அனுமதிக்கின்றன. 1982–இல் உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை, சமூகத்தில் அதிருப்தியைத் தூண்டும் வாசகங்கள் அடங்கிய கையேடுகளை விநியோகிக்க முற்பட்டதற்காக சிங்கப்பூர் மக்கள் விடுதலை நிறுவனம் எனப் பெயரிய இரகசிய முஸ்லிம் கும்பலைச் சேர்ந்த 5 உறுப்பினர்களை நீதிமன்றத்தில் நிறுத்தியது. அரசாங்கத்தைக் கவிழ்ப்பது அந்தக் கும்பலின் நோக்கமாக இருந்தது.

“தடுப்புக்காவல்” அதிகாரத்தை குற்றவியல் (தற்காலிக விதிகள்) சட்டமும் கொண்டிருக்கிறது.[2]

[2] ‘தடுப்புக்காவல்’ அம்சத்தை உள்ளடக்கிய குற்றவியல் (தற்காலிக விதிகள்) சட்டம் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்படமுடியாத இரகசியச் சங்கம் மற்றும் போதைப்பொருள் கடத்தும் கும்பல் தலைவர்களுக்கு எதிராய் நடவடிக்கை எடுக்க அதிகாரம் கொண்டுள்ளது. இந்தத் தலைவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத்தொடர முடியாததற்குக் காரணம், அவர்களால் பாதிக்கப்பட்டோர், ரகசியக் கும்பல் மற்றும் போதைப்பொருள் கடத்தும் கும்பல் ஆகியவற்றின் இதர உறுப்பினர்கள் தங்களைப் பலிவாங்கிவிடுவார்கள் என்று அஞ்சுவதால்தான்.



13892-Why the ISA 90-91 2/16/04, 1:04 PM

# உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் தடுப்புக்காவல் அதிகாரம் எப்போது பயன்படுத்தப்படுகிறது?

வழக்குத் தொடுப்பது நடைமுறைக்கு உகந்ததாக இல்லாத போதும் மிரட்டல் உண்மையாகவும் அதற்கு எதிராய் செயல்படவேண்டி இருக்கும்போதும், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் தடுப்புக் காவல் அதிகாரம் பயன்படுத்தப்படுகிறது.

வழக்குத் தொடுப்பது நடைமுறைக்கு உகந்ததாக இராது என்பதற்கு சில காரணங்கள்:

- சாட்சிகளின் அடையாளம் அம்பலமாகி அவர்கள் ஆபத்துக்குள்ளாக நேரிடலாம்.
- இரகசியத் தகவல் வட்டாரங்கள் அல்லது மறைமுக புலனாய்வுகள் அம்பலமாகலாம்.
- மற்ற நாடுகளுடனான உறவு பாதிக்கப்படலாம் (வேவு சம்பந்தப்பட்ட விவகாரங்களில்).
- நீண்டதொரு வழக்கு விசாரணையில் இன மற்றும் சமய உணர்வுகள் தூண்டப்படலாம்.

சாத்தியம் இருப்பின், இதன் தொடர்புடைய வேறொரு சட்டத்தைப் பயன்படுத்தி உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்ட குற்றவாளி ஒருவர் மீது அரசாங்கம் குற்றஞ்சாட்டி வழக்குத்தொடரும்.

எடுத்துக்காட்டுக்கு, 1977–ல், இரண்டு கம்யூனிஸ்டுகள் சார்ட்டட் இண்டஸ்ட்டிரீஸ் தொழிற்சாலைக்குள் நுழைந்து வெடிமருந்துகளையும் ஆயுத உதிரி பாகங்களையும் களவாடினர். அரித்திடும், வெடித்திடும் மருந்துகள் மற்றும் அபாயகர ஆயுதங்கள் சட்டம் மற்றும் ஆயுத குற்றங்கள் சட்டத்தின் கீழ் அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

மாஸ்கோவில் பணியாற்றிய இரகசிய குறியீட்டு எழுத்தர் சம்பந்தப்பட்ட வழக்கில், அவர் வெளிநாட்டு ஒற்றர் ஒருவரிடம் தகவல் வழங்கியதற்காக 1980–இல் அதிகாரத்துவ இரகசியங்கள் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டார்.

தடுப்புக் காவல் அதிகாரத்தின் பயன்பாடு மிரட்டலுக்கு பொருந்தியவாறு இருத்தல் வேண்டும். 2000–ஆம் ஆண்டில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கக் கட்டமைப்பை வழிநடத்திய சிங்கப்பூரரை பொருத்தமட்டில், அவர் தடுப்புக் காவலில் வைக்கப்படவில்லை. மாறாக, அவர் அந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தொடர்ந்து பங்காற்றுவதைத் தடுக்கும் பொருட்டு அவர் மீது கட்டுப்பாட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஜமா இஸ்லாமியா வழக்கில், பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக கைதான 36 நபர்களில் ஐவர் அவர்கள் பயங்கரவாத அமைப்பு எதனுடனும் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்வதைத் தடுக்கும் கட்டுப்பாட்டு ஆணையுடன் விடுவிக்கப்பட்டனர்.

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் மிகவும் சக்தி வாய்ந்த ஒன்றாகும். அது நமது தேசிய பாதுகாப்பைக் காத்திட பயன்படுத்தப்பட்டாலுங்கூட, தடுப்புக்காவலில் வைக்கப்படும் தனிநபர்களின் விசாரணை கோரும் உரிமை நிறுத்திவைக்கப்படுவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறது.


13892-Why the ISA 92-93 2/16/04, 1:04 PM

இதனை அரசாங்கம் நன்கு அறிந்து வைத்துள்ளது. எனவேதான், மாற்றுவழி ஏதும் இல்லாத நிலையில் மட்டுமே உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் மிகவும் அத்தியாவசியமாகப் பயன்படுத்தப்படுகிறது.

1989–க்கும் 1998–க்கும் இடைப்பட்டக் காலத்தில், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் 1997, 1998 ஆகிய ஆண்டுகளில் இருமுறை மட்டுமே பயன்படுத்தப்பட்டது. அப்போது கைதான அறுவரும் அன்னிய வேவு நிறுவனங்களுக்காக ஒற்றர் வேலை பார்த்துவந்தனர். அவர்கள் இப்போது விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

# தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்க என்னென்ன பாதுகாப்புகள் இருக்கின்றன?

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம், தெளிவான சட்ட வரையறைகள், தேவைகள் மற்றும் காரணங்கள் காட்ட வேண்டிய அவசியம் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது.

- உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதாகும் ஒருவரை 48 மணி நேரம் வரை தடுப்புக்காவலில் வைத்திருக்க முடியும்.
- அதற்கும் கூடுதலான காவல் நீட்டிப்புக்கு குறைந்தது ஒரு போலீஸ் சூப்பரிண்டெண்டனின் அங்கீகாரம் தேவை.
- நீட்டிப்பு, போலீஸ் ஆணையரிடம் தெரிவிக்கப்படவேண்டும்.
- ஒருவரை 14–நாட்களுக்கு மேல் காவலில் வைக்கவேண்டியிருந்தால், போலீஸ் ஆணையர் அதனை உள்துறை அமைச்சருக்குத் தெரிவிக்கவேண்டும்.
- உள்துறை அமைச்சர் தடுப்புக்காவல் ஆணை ஒன்றை பிறப்பித்தாலொழிய கைது செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்கு மேல் எவரையும் தடுப்புக்காவலில் வைத்திருக்க முடியாது. சிங்கப்பூர் குடியரசு அதிபரின் அனுமதியும் இதற்குத் தேவை.
- தடுப்புக்காவல் ஆணை தேவைப்படும் அளவிற்கு குற்றம் கடுமையானதாக இல்லாவிட்டால், தடுப்புக்காவல் ஆணைக்குப் பதில் கட்டுப்பாட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நபர் சில கட்டுப்பாட்டு நிபந்தனைகளுடன் விடுவிக்கப்படலாம். எடுத்துக்காட்டுக்கு, அனுமதியின்றி அவர் நாட்டை விட்டு வெளியேற முடியாது.
- தடுப்புக்காவல் ஆணைகள் மற்றும் கட்டுப்பாட்டு ஆணைகள் புதுப்பிக்கப்படலாம். ஆனால், அவை உள்துறை அமைச்சராலும் அதிபர் அவர்களாலும் அங்கீகரிக்கப்படவேண்டும். ஒவ்வொரு புதுப்பிப்பும் ஈராண்டுகளுக்கு மேற்போகக்கூடாது.
- ஒவ்வொரு தடுப்புகாவல் ஆணையும் கட்டுப்பாட்டு ஆணையும் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்ட ஆலோசனை மன்றத்தால் மறு ஆய்வுச் செய்யப்படவேண்டும்.
- உச்சநிநீதிமன்ற நீதிபதி தலைமையிலான ஆலோசனை மன்றம் ஒரு சுயேச்சையான மன்றமாகும். தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்து அதிபர் நியமிக்கும் இரண்டு குடிமக்கள் பிரமுகர்களும் அதில் உறுப்பினர்களாக இருப்பர். ஆலோசனை மன்றம் சாட்சிகளை அழைத்து விசாரிப்பது, உறுதிமொழிகளை நிர்வகிப்பது மற்றும் பத்திரங்களைத் தாக்கல் செய்யும்படி நிர்பந்திப்பது போன்ற ஒரு நீதிமன்ற அதிகாரங்கள் அனைத்தையும் பெற்றிருக்கிறது. ஆக, தடுப்புக்காவல் கைதியின் வழக்கு முழுமையாக ஆராயப்படுகிறது. மன்றத்தின் முடிவுகள் பின்னர் அதிபரிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன.



13892-Why the ISA 96-97 2/16/04, 1:05 PM

# தடுப்புக்காவல் கைதிக்கு உரிமைகள் ஏதேனும் உண்டா?

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்படும் ஒரு நபர் தனது சுதந்திரத்தை இழந்திருந்தாலும், அதிமுக்கியம் வாய்ந்த உரிமைகளை இன்னும் கொண்டிருப்பார்.

- தடுப்புக்காவல் ஆணை வழங்கப்பட்ட 14–நாட்களுக்குள் தடுப்புக்காவல் கைதிகளுக்குத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதற்கானக் காரணத்தையும் தடுப்புக்காவல் ஆணையை எதிர்த்து உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்ட ஆலோசனை மன்றத்திடம் முறையிட அவர்களுக்கு உள்ள உரிமையையும் எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும்.
- காவல் கைதிகளுக்குத் தங்களைப் பிரதிநிதிக்க ஒரு வழக்கறிஞர் அல்லது வேறு எவரேனும் ஒருவரை தங்கள் விருப்பப்படி நியமிக்க உரிமை உண்டு.
- தடுப்புக்காவல் கைதிகள் இரகசியக் காவலில் வைக்கப்படுவதில்லை. குடும்ப உறுப்பினர்களுக்கு விவரம் தெரிவிக்கப்படுகிறது; குடும்ப ஆதரவு மற்றும் தொடர்பு அதிகாரியின் உதவியை அவர்கள் பெறுகின்றனர்.
- தடுப்புக்காவல் கைதி விசாரிக்கப்பட்டுவரும் வேளையில் வருகைகள் மறுக்கப்படலாம். ஆனால், 30–நாட்களுக்குப் பிறகு குடும்ப உறுப்பினர்களை வழக்கமான நாட்களில் பார்க்கவும் ஆலோசனை மன்றத்தில் முறையிடுவதற்கான தமது வாதத்தைத் தயாரிப்பதற்கு வழக்கறிஞர்களைச் சந்திக்கவும் காவல் கைதிக்கு உரிமை உண்டு.
- 50–க்கும் மேற்பட்ட சமாதான நீதிபதிகள், சமூகத் தலைவர்கள் ஆகியோரைக் கொண்ட மேற்பார்வையாளர் குழுமம் ஒன்றும் முன்னறிவிப்பு ஏதுமின்றி தடுப்புக்காவல் நிலையங்களுக்கு வருகைகள் மேற்கொள்ளும். காவல் கைதி நலமாக இருப்பதை உறுதிசெய்வதுடன், கைதி துன்புறுத்தல் எதற்கும் ஆளாகியிருப்பின் அதனைப் பற்றிய அறிக்கையை உள்துறை அமைச்சருக்கு அது சமர்பிக்க வேண்டும்.
- தடுப்புக்காவல் கைதியின் சமயக் கடப்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன. எடுத்துக்காட்டுக்கு, பரிமாரப்படும் உணவு அவரது சமயத் தேவைகளுக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும்.
- தடுப்புக்காவல் கைதிகள் மருத்துவர் ஒருவரால் வழக்கமான நாட்களில் தவறாமல் பரிசோதிக்கப்படுகின்றனர். அவர்களது உடல்நலத்தை உறுதிசெய்திட அவர்கள் அதிகாரிகளால் விசாரிக்கப்படும் ஒவ்வொரு முறையும் விசாரணைக்கு முன்னும் பின்னும் கூட மருத்துவரால் பரிசோதிக்கப்படுகின்றனர். மேலும், தடுப்புக்காவல் கைதி ஒருவர் எந்நேரத்திலும் மருத்துவரைக் காணக் கோரலாம். கைதிகளுக்கு காயங்கள் ஏதும் ஏற்பட்டு இருப்பின், மருத்துவர் அதனை உள்துறை அமைச்சின் நிரந்தரச் செயலாளரிடம் தெரிவிக்கவேண்டும்.

## உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்ட பயன்பாட்டில் கட்டுப்பாடு ஏதேனும் இருக்கின்றதா?

தடுப்புக்காவல்களை ரத்து செய்யும் அதிகாரம் சிங்கப்பூர் குடியரசு அதிபரிடம் உள்ளது. இதன் பொருள் எவரேனும் ஒருவரை தடுப்புக்காவலில் வைக்கும்படி கோரும் அரசாங்கத்தின் பரிந்துரையை உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்ட ஆலோசனை மன்றம் ஏற்காவிடில், அரசாங்கத்தின் பரிந்துரையை நிராகரிக்க அதிபருக்கு அதிகாரம் உண்டு என்பதாகும்.

இறுதியாக, உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதினின்று கட்டுப்படுத்தும் உச்ச அதிகாரம் அரசியல் சார்ந்ததாக இருக்கும்.

தடுப்புக்காவல் ஆணையை உள்துறை அமைச்சர் அங்கீகரிப்பதற்கு சட்டம் அனுமதி வழங்கினாலும், அத்தகைய முடிவுகள் எப்போதுமே பிரதமராலும் அவரது அமைச்சரவையாலுமே எடுக்கப்பட்டு வந்துள்ளன. தடுப்புக்காவல் ஆணையை அங்கீகரிப்பதற்குமுன் அதன் அவசியத்தின்பால் அவர்கள் மனநிறைவு கொள்ள வேண்டும்.

சிங்கப்பூர் ஒரு நாடாளுமன்ற ஜனநாயக நாடு என்பதால், அரசாங்கம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அரசாங்கம் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தினால், அதனை அனைத்து சிங்கப்பூரர்களும் பொறுப்புதாரியாக்கிவிடுவர்.



ஆக, உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் தடுப்புக் காவல் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தப்படுவதினின்று கட்டுப்படுத்தும் உச்ச அதிகாரம் சிங்கப்பூர் மக்களிடமே உள்ளது.



13892-Why the ISA 100-101 2/16/04, 1:05 PM

## 1 தடுப்புக் காவல் ஆணை

தடுப்புக் காவல் ஆணை விடுக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள் ஆலோசனை மன்றம் கூடி தடுப்புக் காவல் கைதிகளின் வாதங்களை ஆராயவேண்டும். கைதிகள் தாமாகவோ தங்களால் தெரிவுச் செய்யப்படும் வழக்கறிஞர் மூலமாகவோ மன்றத்திடம் வாதங்களைத் தெரிவிக்க உரிமையுண்டு. வாதங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஆலோசனை மன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

## 2 ஆலோசனை மன்றம்

ஆலோசனை மன்றம் கூடி சாட்சியங்களை ஆராய்ந்து வாதங்களைக் கேட்டறிந்து சாட்சிகளையும் உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை அதிகாரிகளையும் விசாரிக்கும். ஆலோசனை மன்றம் சாட்சிகளை அழைத்து விசாரிப்பதற்கும் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும்படி கோரும் உத்தரவுகளைப் பிறப்பிப்பதற்கும் நீதிமன்ற அதிகாரங்கள் அனைத்தையும் பெற்றிருக்கிறது. தான் விசாரித்த அனைத்தையும் ஆலோசனை மன்றம் பரிசீலிக்கும். தான் கண்டறிந்தவற்றையும் பரிந்துரைகளையும் அது அதிபரிடம் சமர்ப்பிக்கும்.

## 3 தடுப்புக்காவலா விடுவிப்பா?

அதிபர், ஆலோசனை மன்றத்தின் பரிந்துரைகளைப் பரிசீலிப்பார். அவர் தடுப்புக்காவலில் இருப்பவரை தொடர்ந்து தடுப்புக்காவலில் வைப்பதா விடுவிப்பதா என உள்துறை அமைச்சருக்கு ஆணை இடுவார். தடுப்புக்காவலில் இருப்பவரை விடுவிக்கும்படி மன்றம் பரிந்துரைத்திருக்கும் நிலையில் அதிபரின் ஒப்புதலின்றி அவரை காவலில் தொடர்ந்தாற்போல் வைத்திருக்கக்கூடாது.

## 4 மறு ஆய்வு

தடுப்புக்காவலில் உள்ளவர்களின் பிரதிநிதித்துவம் கடைசியாக செய்யப்பட்டதிலிருந்து 12 மாத இடைவெளிக்குள் ஆலோசனை மன்றம் ஒவ்வோர் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத் தடுப்புக்காவல் வழக்கையும் மறு ஆய்வு செய்யவேண்டும். மேலும், ஆலோசனை மன்றம் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்ட கட்டுப்பாட்டு ஆணையின் கீழ் விடுவிக்கப்பட்டவர்களின் வழக்குகளையும் 12 மாத இடைவெளிக்குள் மறு ஆய்வு செய்ய வேண்டும். ஈராண்டுக் கால தடுப்புக்காவல் இறுதிவாக்கில், (குறிப்பு: தடுப்புக்காவல் ஆணையின் காலவரம்பு ஈராண்டுக்கு மேல் இராது) ஒரு நபரின் தடுப்புக்காவல் இன்னும் தேவைப்படின், தடுப்புக்காவலின் காலக்கெடுவை நீட்டிக்க விண்ணப்பம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆலோசனை மன்றத்தால் சுயேச்சையாக மறு ஆய்வு செய்வதற்குரிய அதே விதிமுறைகள் இதற்கும் பொருந்தும்.